முச்சந்தி முரளி



"இந்தக் கூத்தையெல்லாம் பேய்க்குஞ்சுகள் மாதிரி பார்க்க வேண்டியது எங்கட தலைவிதி கண்டியளோ"


Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 82

வெள்ளிக்கிழமை
16 பெப்ரவரி 2024

நாள்
2055


மீண்டும் வெடித்தது உட்கட்சி முரண்பாடு

# தமிழரசின் மாநாட்டுக்கு இடைக்காலத் தடை!

## யாழ்ப்பாணம், திருமலை நீதிமன்றங்கள் உத்தரவு

**திருகோணமலை, பெப்ரவரி 16**

**தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு இடைக்காலத் தடைவிதித்து, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை நீதிமன்றங்கள் நேற்று உத்தரவிட்டுள்ளன. உட்கட்சி முரண்பாட்டின் உச்சமாக, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் ஆதரவாளர்களே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.**

11



## எந்த வழக்குகளையும் எதிர்கொள்ளத் தயார்!

### சிறீதரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

எந்த வழக்கையும் எதிர்கொள்ள நாம் தயார். கட்சிக்கு எதிராக எந்தச் சூழ்ச்சிகள் வந்தாலும் அதை நானும் எனது கட்சியும் மக்களின் ஆத்ம பலத்துடன் முறியடிப்போம் - என்று தமிழரசுக் கட்சியின் தலைவரான சி.சிறீதரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

11

## வழக்குக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை

### சுமந்திரன் உறுதியாகத் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 16

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்குத் தடைகோரித் தொடரப்பட்ட வழக்குகளுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான எம்.ஏ.சுமந்திரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின்

04

## ஆசிரியர் மீது தாக்குதல்

கிளிநொச்சி, பெப். 16

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் ஆசிரியர் ஒருவர் மீது இளைஞர் குழுவொன்று நேற்றுத்தாக்குதல் நடத்தியுள்ளது. தாக்குதலில் காயமடைந்த ஆசிரியர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தவணைப் பரீட்சைகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரீட்சையின் போது மாணவன் ஒருவரின் செயற்பாடு தொடர்பில் ஆசிரியர் கண்டித்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாகவே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(அ-ம-9)

## தரம் - 10 தமிழ் இலக்கியம்

## பரீட்சைக்கான வினாத்தாளை அனுப்ப மறந்த திணைக்களம்

### மாணவர்கள் காத்திருப்பு: ஆசிரியர்கள் அவதி!

யாழ்ப்பாணம், பெப். 16

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், தரம் - 10 மாணவர்களுக்கான தொகுதிப் பாடங்களில் ஒன்றான தமிழ் இலக்கிய நயம் பரீட்சை வினாத்தாளை வடமாகாண கல்வித் திணைக்களம் அனுப்ப மறந்ததால் பரீட்சை மண்டபங்களில் நேற்றுப் பெரும் அல்லோலகல்லோலம்

11

## கொரோனாத் தொற்றுடன் நாடாளுமன்றில் டலஸ்!

### அவரே ஒப்புதல்

கொழும்பு, பெப். 16

கொரோனாத் தொற்றுடன் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்ட விடயத்தை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெரும. கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதிப் பதவியில்

04

## ஜனாதிபதிப் பதவியைவிடவும் சம்பந்தனின் பாராட்டே பெரிது!

### டலஸ் பெருமிதம்

கொழும்பு, பெப். 16

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் நான் தோல்வி அடைந்திருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் என்னைப் பற்றிக் கூறிய அந்த

11

## ஐஸ்கிறீமுக்குள் 'தவளை'

யாழ்., பெப். 16

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் அமைந்துள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையமொன்றில் விற்கப்பட்ட ஐஸ்கிறீமில் தவளை இருந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர்களால் விசாரணைகள் ஆரம்பிக்கப்

04

## நிகழ்நிலைக்காப்புச் சட்டம் எதிராக சுமந்திரன் மனு!

கொழும்பு, பெப். 16

நிகழ்நிலைக்காப்புச் சட்டத்துக்கு எதிராக, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

நிகழ்நிலைக்காப்புச் சட்டம் அரசமைப்புக்கு முரணானது. சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் இந்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் இது அரசமைப்புக்கு முரணானது என சுமந்திரன் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ம-6)

உயிர் குடிக்கும் ரயில் கடவை; பொதுமக்கள் நேற்றுப் போர்

விரிவு:- பக்.11



## 13 ஆம் திருத்தத்திலிருந்து பொலிஸ் அதிகாரம் நீக்கம்!

### மறுசீரமைப்புச் சட்டவரைவை முன்வைத்தார் உதய கம்மன்பில

கொழும்பு, பெப். 16

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக நீக்குமாறு கோரும் அரசமைப்பு மறுசீரமைப்புச் சட்டவரைவு பிவிதுரு ஹெல உறுமயவின்தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவால்

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ். பொலிஸ் நிலையத்தில் வருடாந்தப் பரிசோதனை

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தின், வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு மற்றும் பொலிஸ் அணிவகுப்பு நிகழ்வு என்பன நேற்று வியாழக்கிழமை நடைபெற்றன.

பரிசோதனை நிகழ்வில் யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த பரிசோதனைகளை முன்னெடுத்ததுடன், பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜருள், யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-26-20,66)

## கர்ப்பவதிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப்.16

வலி.தென்மேற்குப் பிரதேசசெயலகத்தால் மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக கர்ப்பவதிகளுக்கு வழங்கப்படும் தை, மாசி மாதத்துக்குரிய நிவாரணம் அவர்களது எல்லைப் பரப்பிலுள்ள கிளைகளினூடாக வழங்கப்படுகின்றது என்று சங்கப் பொதுமுகாமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-63)

# நெல் கொள்வனவுக்கு இம்முறை கடன் திட்டம்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 16

**இந்த முறை பெரும்போக நெல் கொள்வனவில் கடன் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது.**

அரிசி உற்பத்தித் தொழிற்றுறையினர் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பொதுமக்கள் அலுவல்கள் பணிப்பாளர் நாயகம் ரஜித் கீர்த்தி தென்னக்கோன் இதனைத் தெரிவித்தார்.

"இந்தக் கடன் திட்டத்தின் கீழ், 9 பில்லியன் ரூபா கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினூடாக இந்தக் கடன் வசதி வழங்கப்பட்டுள்ளது.

கடனைத் திருப்பிச் செலுத்த 180 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படும்.

15வீத வருட வட்டி வீதத்தில் 4 வீதம் திறைசேரியால் அந்தந்த வங்கிகளுக்கு வழங்கப்படும். அதன்படி, கடன் பெறுநர்கள் 11 வீதம் மட்டுமே வருட வட்டி செலுத்தவேண்டும்.

விவசாயிகளுக்கு நல்ல விலையைப் பெற்றுக்கொடுப்பதோடு, மக்களுக்கும் நியாயமான விலையில் அரிசியைப் பெற்றுக்கொடுப்பதே இந்தக் கடன் திட்டத்தின் நோக்கமாகும்" என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

## கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், பெப். 16

ஏழாலையில் கசிப்புடன் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

புலனாய்வுத் தகவலுக்கமைய ஏழாலை வடக்குக்கு விரைந்த பொலிஸார் 750 மில்லி லீற்றர் கசிப்பை கைப்பற்றினர். (ஓ-125)



# மரண அறிவித்தல்

## திருமதி சிவாகரன் தர்சனா (தர்சி)



நீர்வேலி மேற்கு கரந்தனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவாகரன் தர்சனா (தர்சி) அவர்கள் நேற்று (15.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை நந்தகுமாரன் மற்றும் இராமலர் தம்பதியரின் பாசமிகு மகளும், கனகலிங்கம் சிவாகரனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்துரை கனகலிங்கம் மற்றும் கலாநிதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், நிகாஷன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன்), கிசானியா (நீர்வேலி பாலர் நிலையம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோகுலன் (மங்கை ஸ்ரோர்ஸ், கரந்தன்), குகதாஸ் (லண்டன்), குலமங்கை, சுகாசினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விஷயந்தி, லோஜினி (லண்டன்), ஜெயந்தன் (பசுமை வேளாண்மை புன்னாலைக் கட்டுவன்), வினோதன் (அவுஸ்திரேலியா), ஐங்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், டக்சன், டிலக்ஷியா, கிரிஷா, நிருத்திகா ஆகியோரின் பாசமிகு மாமியும், சுவேதிகா, நிவேதிகா, தாரிகன், கிரனியா, நயோமி ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27920) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் இடைவிலகல் நாட்டுக்கு எதிர்காலத்தில் தீங்கு!

டலஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 16

**நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பெரும் எண்ணிக் கையிலான பாடசாலை மாணவர்கள் இடை விலகி வருகின்றனர். இது நாட்டின் எதிர்காலத் துக்குப் பெரும் சவாலாக அமையும்.**

-இவ்வாறு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பாடசாலைசெல்லும்மாணவர்களில் 53 வீதமானவர்களுக்கு பாடசாலைப் புத்தகப்பை ஒன்றைக் கொள்வனவு செய்யக்கூட முடியாத நிலைமை காணப்படுகிறது. தற்போது சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் இடைவிலகி உள்ளனர் என்று தெரியவருகிறது. அறிவார்ந்த இலங்கைச் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு பாடசாலை மாணவர்கள் இடைவிலகல் இடையூறாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மைத்திரிக்கும் அத்தருக்குமிடையே சந்திப்பு

கொழும்பு, பெப்.16

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் அஃப்ரின் அத்தருக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இடம்பெற்றது. (ஏ-இ)

## ஐ.ம.சக்திக்குள் ஐக்கியமாகும் இராணுவம்

கொழும்பு, பெப். 16

முன்னாள் சிறப்பு அதிரடிப்படைத்தலைவரான நிமல் லெவ்கே ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்துள்ளார்.

கட்சிக்கான உறுப்புரிமையை ஐக்கிய மக்கள்சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் பெற்றுக் கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையும் மூன்றாவதுபாதுகாப்புத்துறை உயர் அதிகாரி இவராவார் என்பது குறிப்பிடத் தக்கது. (ச-இ)

## ஊடகங்களை ஒடுக்க அரசாங்கம் முயற்சி!



கொழும்பு, பெப்.16

அரசாங்கம் இலத்திரனியல் ஊடகங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட மூலத்தின் ஊடாக அரசாங்கம் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களை ஒடுக்கி வைத்துள்ளது. தற்போது ஒளிபரப்பு ஆணைக் குழு சட்டமூலத்தின் மூலம் எதிர்காலத்தில் இலத்திரனியல் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியொன்றை முன்னெடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## தேர்தல் பொறுப்புகள் ரணிலால் பகிர்ந்தளிப்பு

ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக முன்னெடுத்து வரும் நிலையில், முக்கியமான சில பதவிகளை உருவாக்கி அதற்கு உறுப்பினர்களையும் நியமித்துள்ளார்.

இதன்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரை முகாமையாளராக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் அமையவுள்ள கூட்டணியின் ஏற்பாட்டாளராக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். கூட்டணியைப் பலப்படுத்துவதற்கும், கட்சிகளை இணைத்துக்கொள்வதற்குமான முழுமையான பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக்குழுவிடம் இருந்து ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார். (ஒ-44)



## எழுச்சியடைகிறது ஜே.வி.பி. சரத்பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

கட்சிசாரா வாக்குகளில் (மிதக்கும் வாக்குகள்) 30 வீதம் தேசிய மக்கள் சக்திக்குச் சென்றடைந்துள்ளது. இது மிகப் பெரிய மாற்றமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி.யில் முன்னர் ஐந்து இலட்சம் பேர் இருந்தாலும் அந்தக் கட்சியில் ஒழுக்கக் கட்டுப்பாடு இருந்தது. கூட்டங்களின்போதுகூட இராணுவக்கட்டமைப்புபோல ஒழுக்கம் பேணப்பட்டுவந்தது. ஆனால் ஜே.வி.பி. தற்போது தேசிய மக்கள் சக்தியாகியுள்ளது. அந்தக் கூட்டணியில் இணைபவர்கள் எல்லாம் முன்னைய ஜே.வி.பி.யினர் போல் செயற்படுவார்கள் எனக் கூறமுடியாது.

மிதக்கும் வாக்குகளில் 30 வீதம் அவர்களுக்கு (தேசிய மக்கள் சக்திக்கு) சென்றுள்ளது. இளைஞர்களின் வாக்குகளிலும் சிறு வீதம் சென்றுள்ளது. முன்னர் 5 இலட்சம் என்றால் தற்போது 20 இலட்சம். நாட்டை ஆள்வதென்பது விளையாட்டான விடயமல்ல அதற்கு அனுபவம் இருக்கவேண்டும். அந்த இடத்துக்குத் தேசிய மக்கள் சக்தி வந்துள்ளதா? என்பது சந்தேகம் தான் - என்றார். (ஒ-44)

## பட்டினம் தெரியுமோ?

மறுபடியும் முதலில இருந்தா? என்டுற மாதிரி, ஒருமாதிரிச் சீருக்கு வந்த வீட்டுக்கட்சியின்ர உள்வீட்டுப் பிரச்சினை, நேற்று நீதிமன்றப் படியேறி, சந்தைக்கு வந்திட்டுது. 19 ஆம் திகதி நடக்க இருந்த மாநாட்டுக்கு இடைக்காலத் தடையும் நீதிமன்றம் போட்டிருக்கு. இப்ப கூட்டுற கட்சியின்ர தேசிய மாநாடு சட்டவிரோதமென்டும், இதுக்கு முதல் தெரிவு செய்த நிர்வாகத்துக்கு தடை போடோனும் என்டும் ஒராள் திருகோணமலையில ஒரு வழக்கைப் போட்டிருக்கிறார். அதைக் கேட்டிட்டு நீதிமன்றமும் இடைக்காலத் தடை போட்டிருக்கு. அதைமாதிரி யாழ்ப்பாணத்திலையும் 19 ஆம் திகதி நடக்க இருந்த மாநாட்டுக்குதடை போடோனுமென்டு இன்னொரு வழக்குப் போடுப்பட்டு, அதிலையும் மாநாட்டுக்கு இடைக்காலத் தடை விதிச்சிருக்குது.

இப்பிடி திருகோணமலையிலையும், யாழ்ப்பாணத்திலையும் சொல்லிவைச்ச மாதிரி ஒரே நாளில, இந்த வழக்குகளைப் போட்டது ஆரெண்டு எல்லாருக்குமே வடிவாத் தெரியும். கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லைத்தானே. வழக்குப் போட்டவையும், அந்த வழக்காளியள் சார்பில நீதிமன்றத்தில ஆஜரான லோயர்ஸ்மாரும் சுமந்திரன்ர ஆக்கள் எண்டதும் உள்ளங்கை நெல்லிக்கனியாத் தெரிஞ்ச விசயம். இப்பிடி வழக்குப் போடப்போயினம் எண்டால் அதைமுதலே போட்டிருக்கலாம். அதைவிட்டிட்டு, வருத்தம் மாறின கையோட எல்லா வேலையும் விட்டு வந்த சத்தியலிங்கத்தாரின்ர வீட்டில நாலைஞ்சு தரம் ரண்டு தரப்பும் கூடிக்கதைச் சதும், பிறகு ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து கையெழுத்துப் போட்டதும் தேவையே இல்லாத ஆணியள் தான். அங்காலிப்பக்கம் நாங்கள் இணைஞ்சிருக்கத் தயார் எண்டு வெள்ளைக்கொடி காட்டிக்கொண்டு, இஞ்சாலிப் பக்கத்தால வழக்குப் போட்டு பிரச்சினையைப் பெரிசாக்கிற வேலையைப் பார்த்திருக்கினம். சிலவேளையில இந்த வழக்குகளுக்கும் சுமந்திரனுக்கும் சம்பந்தமில்லாமல் கூட இருக்கலாம். சுமந்திரனில இருக்கிற அபிமானத்தில அவரின்ர தோல்விக்கு இப்பிடி வழக்குப் போட்டால் ஆறுதலா இருக்கும் எண்டு அவரின்ர அல்லக்கை யள் நினைச்சிருக்கலாம். அதால அவருக்கே தெரியாமல் திருகோணமலையிலையும், யாழ்ப்பா ணத்திலையும் ஒரேநாளில வழக்குப்போட்டு 'சர்ப்பிரைஸ் கிப்ட்' குடுக்க நினைச்சிருக்கலாம். ஆனால் சனம் என்ன நினைக்கும்? கட்சிக்குள்ள சிறீதரனுக்கோ, சுமந்திரனுக்கோ ஆதரவு குடுக்கா மல் நடுநிலையா நிக்கிறவை என்ன நினைப்பினம்? தலைவர் தேர்தலில தோத்துப்போன வெப்பியாரத்தில சுமந்திரன்தான் இப்பிடியெல்லாம் கட்சியைச் சீரழிக்கிற வேலையைச் செய்யிறார் எண்டுதானே எல்லாரும் முடிவுக்கு வருவினம்.

தமிழர்களுக்கு எண்டு ஒண்டிரண்டு கட்சிதான் உருப்படியா இருக்கு. அந்தக் கட்சியள் உருப்படியான வேலையளைச் செய்யாட்டியும் சனம் அப்பிடி நம்புது. அந்த நம்பிக்கையிலதான் சனங்கள் ஏதோ ஒரு தீர்வு வருமெண்டும் காத்திருக்குதுகள். இப்ப இருந்த கட்சியையும் கோமாவில படுக்கச் செய்யிறஎ வுக்கு பழிவாங்கினால் கட்சியும் இல்லாமல், அரசியலும் இல்லாமலும் தான் போகும். ஒரு தோல்வி என்னவெல்லாம் செய்யும்? எப்பிடி ஒரு அறிவாளியைக் கூட கண்ணைமூடிக்கொண்டு வழக்குகளைப் போடவைக்கும் எண்டதுக்கு இந்த வழக்குகள் நல்ல உதாரணம் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிஷா கொலை; குற்றவாளிக்கு கடூழியம்!

சிறுமி ஆயிஷாவைக் கடத்திச்சென்று கொலை செய்த குற்றவாளிக்கு, நீதிமன்றம் 27 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

அத்துடன் உயிரிழந்த சிறுமிக்காக அவருடைய தாய்க்கு பிரதிவாதி 30 இலட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார். இலங்கையை அதிரவைத்த இந்தச் சம்பவம் சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் பாணந்துறை, அட்டுலுகம வில் நடந்தது.

சிறுமியின் தந்தையின் நண்பரான பிரதிவாதி, சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தும் நோக்கத்துடன் கடத்திச் சென்றிருந்தார் என்றும், சிறுமி சத்தமிட்டதால் அச்சமடைந்து சிறுமியை சேற்றில் அமிழ்த்திக் கொலை செய்தார் என்பதும் விசாரணைகளில் கண்டறியப்பட்டது. (ம)

## கொரோனாத்...

இருந்து விலகிய பின்னர், அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. டலஸ் மற்றும் ரணில் இருவருக்கும் இடையில் நேரடிப்போட்டி நிலவியது. இந்த நிலையில் வாக்கெடுப்பு தினத்தன்று தனக்கு கொரோனாத் தொற்று இருந்ததாக டலஸ் தற்போது தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பன்று எனக்கு கொரோனாத் தொற்றி இருந்தது. இது யாருக்கும் தெரியாது. வேட்புமனுவைத் தாக்கல்செய்ய நாடாளுமன்றத்தில் இருந்தாக வேண்டிய சூழ்நிலையால் கொரோனாப் பெருந்தொற்றுடன் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டேன் என்று டலஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - கொரோனாப் பெருந்தொற்று ஏற்பட்டால் தம்மைச் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும் என்றும், பொதுவெளிகளில் நடமாடக்கூடாது என்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படும் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அமர்வில் கலந்துகொண்டமை சர்ச்சையாகியுள்ளது. (அ-ம-44)

## வழக்குக்கும்...

மாநாட்டுக்குத் தடைகோரி நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் சுமந்திரனின் ஆதரவாளர்களாலேயே தொடரப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நிலையில், அது தொடர்பில்வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்குத் தடைகோரி தொடரப்பட்ட வழக்குகளுக்கும் எனக்கும் எந்தத் தொடர்புமில்லை. யாராலோ தொடரப்பட்ட வழக்குகளுக்கெல்லாம் நான் பொறுப்பாகமுடியாது. கட்சி கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் இந்த வழக்குகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் முன்னிலையாகி கட்சிக்காக வாதாட எப்போதும் தயாராகவே உள்ளேன்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம)

## ஐஸ்கிறீமுக்குள்...



பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஒருவர் ஐஸ்கிறீமை வாங்கியவேளையே, அதனுள் தவளை ஒன்று இருப்பதை அவர் அவதானித்துள்ளார். உடனடியாக இது தொடர்பாகச் சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-66)

# ஆப்கன் கிரிக்கெட் அணியை வீழ்த்தி வெள்ளையடித்தது இலங்கை!




இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இலங்கை 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று 3:0 என்ற ரீதியில் ஆப்கானிஸ்தானை "வைட் வோஷ்" செய்துள்ளது.

தொடரின் மூன்றாவதும், இறுதியுமான ஆட்டம் நேற்று முன்தினம் கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

ஆப்கன் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 2:0 என ஏற்கனவே கைப்பற்றியிருந்த இலங்கை அணி, இந்த ஆட்டத்தில் அணியில் இரண்டு மாற்றங்களை மேற்கொண்டிருந்தது. மதீஸ் தீக்ஷன, வனிந்து ஹஸரங்க ஆகியோருக்குப் பதிலாக துனித் வெல்லாலகே மற்றும் அகில தனன்ஜய ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டிருந்தனர்.

NIPPON PAINT
THE COATINGS EXPERT

துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஆப்கன் அணிக்கு ரஹ்மானுல்லா குர்பாஸ், ரஹ்மத் சாஹ் ஆகியோர் சிறந்த ஆரம்பத்தை வழங்கினர். ரஹ்மானுல்லா குர்பாஸ் 48 ஓட்டங்கள் எடுக்க, றஹ்மத் சாஹ் ஒரு சிக்ஸர் மற்றும் 7 பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்கள் எடுத்தார். பின்னர் மத்திய வரிசையில் அஷ்மத்துல்லா ஒமர்சாயின் அரைச்சத உதவியோடு 48.2 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 266 ஓட்டங்களை ஆப்கானிஸ்தான் அணி பெற்றுக்கொண்டது. அஸ்மத்துல்லா ஒமர்சாய் 59 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 54 ஓட்டங்கள் எடுத்தார். இலங்கை அணியின் பந்துவீச்சில் ப்ரமோத் மதுசான் 3 விக்கெட்டுகளையும், அசித பெர்னாண்டோ, துனித் வெல்லாலகே மற்றும் அகில தனஞ்சய ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். 267 என்ற வெற்றி இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 35.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் பதும் நிஸ்ஸங்க தன்னுடைய 5ஆவது ஒருநாள் சதத்தை பூர்த்தி செய்து 101 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 16 பவுண்டரிகள் அடங்கலாக 118 ஓட்டங்கள் பெற்றார். மறுமுனையில் அவிஷ்க பெர்னாண்டோ 66 பந்துகளில் 5 சிக்ஸர்கள் மற்றும் 10 பவுண்டரிகள் அடங்கலாக 91 ஓட்டங்கள் எடுத்தார். இது அவரின் 6ஆவது ஒருநாள் அரைச்சதமாகும். குசல் மெண்டிஸ் 29 பந்துகளில் 4 சிக்ஸர்கள் அடங்கலாக 40 ஓட்டங்கள் பெற்றார். ஆப்கன் அணியின் பந்துவீச்சில் கைஸ் அஹ்மட் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடர் நாயகனாகவும் போட்டியில் சதம் விளாசிய பதும் நிஸ்ஸங்க தெரிவாகினார். (எ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பொறுமைத் தேவைப்படும் நாள். கூடுதலாக லாபம் கிடைக்கும். சிரமங்கள் அறவே நீங்கும்.

**இடபம்:** உங்களுடைய பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப்பேச்சு வெற்றியடையும். நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சில பொறுப்புகளை ஒப்படைப்பார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து லாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பதவிக்கதிரை படுத்தும்பாடு


இலங்கையின் ஆட்சியாளர்கள் எப்போதும் ஆட்சியை தக்கவைப்பதற்காக ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பதே வரலாறு சொல்லும் பாடமாக இருக்கின்றது. ஜனநாயகத்தின் காவலனாக உலகுக்கு தன்னைக் காட்டிக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க கூட, ஜனாதிபதிப் பதவிக்குப் பின்கதவால் தெரிவாகிய பின்னர் ஜனநாயகம் - மனித உரிமைகளை தூக்கிக்கடாசி வருகின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தலை எதிர்கொள்ளத் திராணியற்ற -முதுகெலும்பில்லாத தலைவரென்பதையே அவரது செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். எதிர்வரும் செப்ரெம்பர் - ஒக்ரோபர் மாதங்களுக்குள் அது நடத்தி முடிக்கப்படவேண்டும் என்பது சட்டஏற்பாடு. அதைச் செய்ய வேண்டியது 'சுயாதீனத்' தேர்தல்கள் ஆணைக்குழு. ஆனால் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப்போகின்றேன் என்ற போர்வையில் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க நகர்வுகளை முன்னெடுப்பதாக எதிரணிகள் தொடர்ந்து பரப்புரை செய்கின்றன. நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாயின் நிச்சயமாக மக்கள் வாக்கெடுப்பு (சர்வஜன வாக்கெடுப்பு) நடத்தப்பட்டாகவேண்டும். அதை நடத்துவதன் ஊடாக நாட்டு மக்கள் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு ஆதரவளித்திருக்கின்றனர். அதை ஒழிக்கவேண்டும். புதிய அரசமைப்பைத் தயாரிக்க வேண்டும் என கயிறுவிட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் வரையில் அதை அனுபவிக்கத் துடிக்கின்றார் ரணில். இதனால்தான் எதிரணிகள் முற்கூட்டியே அபாயச்சங்கை ஊதத் தொடங்கிவிட்டன. 'நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு ஆதரவு வழங்குவோம். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட்ட பின்னர்தான் அது செயற்படுத்தப்படவேண்டும்' என்பதில் அவை உறுதியாக உள்ளன. எதிரணிகளின் தொடர்பரப்புரை காரணமாக தனது கபடத்திட்டத்துக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை உணர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எந்தச் சட்டவலுவும் இல்லாத ஜனாதிபதி ஊடகப் பிரிவு ஊடாக அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கிறார். "ஈயம் பூசின மாதிரியும் இருக்கவேணும், ஆனா ஈயமும் பூசக்கூடாது " என்பதைப்போலத்தான் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் இந்த அறிவிப்பு அமைந்திருக்கின்றது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப் பகுதியில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் நடத்தப்படும் என்றும், 2025 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடத்தப்படும் எனவும் பொதுத் தேர்தலுக்கான நிதி அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் எனவும் அந்த ஊடக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது எதிரணிகளின் பரப்புரையை முறியடிக்கவே, இந்த ஆண்டு தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்ததால் நிச்சயம் தேர்தல் நடக்கும் என்றும் கூற முடியாது. ஜனாதிபதி ஊடகப்பிரிவின் அறிவித்தலுக்கு எந்தச் சட்டவலுவும் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கபடத்தனங்கள் அம்பலமாகியமையால் பிறிதொரு வழியால் தேர்தலை ஒத்திவைப்பதற்கான நகர்வுகளை இந் நேரத்துக்குள் திட்டமிட்டிருப்பார். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இன்னமும் இரத்துச் செய்யப்படாத உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு தொங்கிக்கொண்டிருக்கின்றது. நிதி இல்லை என்பதைக் காரணம் காட்டி அதை அந்தரத்தில் தொங்க விட்ட நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் எப்படி ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்?

ஆக மொத்தத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றும் ஜனநாயகத்தின் காவலர் அல்லர். அவரும் ஏனையோரைப்போன்று பதவிப்பித்து பிடித்தவர்தான். அவர் அதிகாரத்துக்கு வராதவரையிலேயே ஜனநாயகத்தின் காவலனாக மிளிர்ந்தார். அதிகாரம் கிடைத்ததும் தனது சுயரூபத்தை, ஆட்சியாளர்களின் பரவணிப்பழக்கத்தை அவரும் காட்டுகிறார். அவ்வளவுதான்.




# இலங்கைப் பண்ணைகளில் 'அமுல்' நிறுவனம் ஆய்வு!

**கொழும்பு, பெப். 16**

**இந்தியாவின் அமுல் நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு, என்.எல்.டி.பி. என்ற இலங்கையின் தேசிய கால்நடை மேம்பாட்டுச்சபைக்குச் சொந்தமான 31 பண்ணைகளில் ஆய்வுகள் நிறைவு பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.**

இலங்கையின் திரவப் பால் தொழிற்றுறையை ஊக்குவிப்பதில் ஒத்துழைக்கும் வகையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அடுத்தே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

ஆய்வின்போது பண்ணைகளின் நிலப் பயன்பாடு, ஆண்டு உற்பத்தி, விலங்குகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை அமுல் குழு சேகரிக்கவுள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை தமது வாழ்வாதாரம் மற்றும் பால் உற்பத்தியில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அதிருப்திகளை உள்ளூர்ப் பாற்பண்ணையாளர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சிறுவர்களிடையே உயரும் புற்றுநோய்

கொழும்பு, பெப். 16

இலங்கையில் வருடாந்தம் 2 முதல் 5 வீதமான சிறுவர்கள் புற்றுநோய் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 15 ஆம் திகதி சர்வதேச சிறுவர் புற்றுநோய் தடுப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இலங்கையில் வருடாந்தம் 2 முதல் 5 வீதமான சிறுவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். பெற்றோர் மத்தியில் போதுமானளவு விழிப்புணர்வு இல்லாததனால் சிகிச்சையின்றி அதிகளவான சிறுவர்கள் உயிரிழக்கின்றனர் - என்றார். (ச-இ)

## நீர்க் கட்டண நிலுவை உயர்வு

கொழும்பு, பெப். 16

நாடளாவிய ரீதியில் நீர்க்கட்டண நிலுவை ஆயிரத்து 450 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது என்று நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதாரநெருக்கடி காரணமாக நீர் பாவனையாளர்கள் உரியநேரத்தில் குடிதண்ணீர்க் கட்டணத்தைச் செலுத்துவதைத் தவிர்க்கின்றனர்.

இந்த நிலையில் நீர்க் கட்டணத்தை செலுத்தத் தவறிய பலரது இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளது என்றும் சபையின்பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## மத்திய வங்கி அசண்டை: மக்களுக்கு சந்தேகம்

கொழும்பு. பெப். 16

நுண் நிதிக்கடன் மற்றும் குத்தகை நிறுவனங்களின் செயற் பாடுகள் தொடர்பில் மத்திய வங்கி அசண்டையீனமாக இருப்பது மத்திய வங்கி ஊழியர்களுக்கும் இவர்களுக்குமிடையே தொடர்பு உள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனக் குத்தகை மற்றும் கடன் செலுத்தும் சங்கத்தின் பதில் செயலர் அசங்க சுமேத அமரசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-6)

## சர்வதேசப் பல்கலைகள் விரைவில் இலங்கையில்

### இராஜாங்க அமைச்சர் சுரேன் தகவல்

மூன்று சர்வதேச பல்கலைக்கழகங்களின் கிளைகளை இலங்கையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

"கண்டியில் இந்தியத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகக்கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது. அமெரிக்க, பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களின் கிளைகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் நிறைவடைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகும் கட்டத்தில் உள்ளது. அவுஸ்திரேலிய கல்வியமைச்சரும் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். சர்வதேச பல்கலைக்கழகங்களின் கிளைகளை ஆரம்பிப்பதன் மூலம் கல்வியை வணிகமயமாக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை" எனவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-6)

**நாளை**

**17.02.2024**

**சனிக்கிழமை**

**மாசி–05**

சுபநேரம் : 03.33 - 05.03

ராகுகாலம் : 09.33 - 11.03

**நாளொரு நல்வார்த்தை**

**"எதுவுமே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் உங்கள் கஷ்டங்கள் மட்டும் எப்படி நிரந்தரம் ஆகும்? கவலையை விடுங்கள். வாழ்க்கையை முதலில் வாழத் தொடங்குங்கள்"**

**– அன்னை தெரேசா –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆபத்தான நிலையில் தேவிபுரம் பாடசாலைக் கூரை

முல்லைத்தீவு, பெப்.16

முல்லைத்தீவு, தேவிபுரம் அ.த.க. பாடசாலைக் கூரைகளின் மரங்கள் சேதமடைந்து காணப்படுவதால் அச்சத்துடனேயே மாணவர்கள் கற்றல் நடவடிக்கையைமேற்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

1964 ஆம் ஆண்டிலும், 2010 ஆம் ஆண்டிலும் பாடசாலையில் அமைக்கப்பட்ட கட்டடங்களின் கூரைகள் தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை, புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டம் என்பவற்றிலும் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

கூரைகளின் மரங்களை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்துள்ளனர். (ப-13)

# போக்குவரத்து நெருக்கடியில் பூநகரி ம.வித்தி. மாணவர்கள்

கிளிநொச்சி, பெப்.16

**கிளிநொச்சி, பூநகரி மகா வித்தியாலய மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.**



கௌதாரிமுனை, பள்ளிக்குடா போன்ற பல்வேறு இடங்களிலிருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கு ஒழுங்கான பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பூநகரி மகா வித்தியாலய மாணவர்கள் பாடசாலைக்கு வந்து செல்லக்கூடிய வகையில், பூநகரியில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபட வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## யோகக்கலை ஆரம்பம்

நல்லூர், பெப்.16

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படைக் கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க்கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சுமார் மூன்று மாத காலங்கள் கொண்ட இந்தக் கற்கைநெறி சனி, ஞாயிறு, அரச விடுமுறை தினங்களில் காலை 6 மணி முதல் காலை 8 மணி வரை நடைபெறும். இதில் ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியுமெனவும் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்குக் கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படுமெனவும் தெரிவித்துள்ளனர்.

பயில விரும்புபவர்கள் அன்று நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ப-213)



## துணுக்காய் பிரதேச அபிவிருத்திக் கூட்டம்

முல்லைத்தீவு, பெப்.16

துணுக்காய்ப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

துணுக்காய்ப் பிரதேச செயலாளர் இராமதாஸ் ரமேஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் துணுக்காய்ப் பிரதேசசபை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-19)

## புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மேய்ச்சல் தரவைகளை இனங்காட்டக் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.16

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரவைகளை இனங்காட்ட வேண்டும் என்று கால்நடை வளர்ப்பாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது காலபோக நெற்செய்கை இடம்பெற்று அறுவடை செய்யப்பட்ட நெல், வட்டுவாகல் தொடக்கம் புதுக்குடியிருப்பு-ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் வரையான வீதிகளில் உலர விடப்படுவதால் வீதிக்கருகில் மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகள் வீதியில் உலர விடப்படும் நெல்லை நோக்கி நகர்வதனால் விபத்துகள் ஏற்படுவதுடன் நெல்லைப் பாதுகாப்பாக உலர விட முடியாத நிலையும், கால்நடைகளுக்குப் போதியளவு மேய்ச்சல் இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

இந்தநிலையில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான மேய்ச்சல் தரவைகளை இனங்காட்டவேண்டும் என்று அதிகாரிகளிடம் கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## கிளைக்குழு தெரிவு

தெல்லிப்பழை, பெப்.16

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவு சங்க மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதற்கான அழைப்புக் கடிதங்கள் அங்கத்தவர்களுக்குத் தனித்தனியாகத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ந. உமாகரன் தெரிவித்தார். (ப-66)

## பொதுமண்டபம் அமைக்குமாறு இளங்கோபுர மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.16

முல்லைத்தீவு, இளங்கோபுரம் கிராமத்தில் பொது மண்டபம் அமைத்துத் தருவதற்கு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் இந்தக் கிராமத்தில் பொது மண்டபம் ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று கடந்த பத்தாண்டுகளாகக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தமது கிராமத்தின் நிகழ்வுகள், கூட்டங்களை நடத்துவதற்கு பொது மண்டப வசதி இல்லாததால் நிகழ்வுகளை மரநிழலிலே நடத்திவருகின்றனர். இதனால் பொது மண்டபம் அமைத்துத் தருவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலாளர் முன்னெடுக்க வேண்டுமென இளங்கோபுரம் மக்கள் தெரிவித்துள்ளனர். (ப-13)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, பெப்.16

தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம், நிர்வாக சபைத்தெரிவு என்பன குறித்த பிரதேச செயலக மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச கலைஞர்களைக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ப-9)

## மன்னார் தேவாலயங்களில் திருநீற்றுப் புதன் திருப்பலி



மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் திருநீற்றுப் புதன் திருப்பலி பங்குத் தந்தையர்களால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில் மன்னார், பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் பங்குத்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலியில் பங்கு மக்கள், பாடசாலை மாணவர்கள், அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-56)

## ஆறு வாரங்களில் 396 தொற்றாளர்கள்

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சல் பாதிப்புடன் கடந்த ஆறு வாரங்களில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 396 ஆகக் காணப்படுவதாக மருத்துவமனை தரப்புத் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

இந்த வருடத்தின் 2ஆவது வாரத்தில் 81 பேரும், 3ஆவது வாரத்தில் 106 பேரும், 4ஆவது வாரத்தில் 77 பேரும், 5 ஆவது வாரத்தில் 85 பேரும், ஆறாவது வாரத்தில் 47 பேருமாக 396 டெங்குத் தொற்றாளர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை உள்ளிட்ட வடமராட்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து டெங்குத் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் டெங்கு நுளம்புகள் பெருக்கத்துக்கு ஏதுவான இடங்களை அழித்துத், துப்புரவாக்கவேண்டும் என்று சுகாதாரத்தரப்பினரால் தொடர்ந்தும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. (ப-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




செல்வி மாலதி சிவராசா
(உப அதிபர் - யாழ் / உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்)

அர்ப்பணிப்பும், ஆளுமையும் மிக்க ஆசிரியப் பெருந்தகையே உங்களின் ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும், மகிழ்வானதாகவும், அமைய தங்களின்

60வது இப் பிறந்தநாளில் வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யாழ் / உயரப்புலம்
மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்

(cs 27890)

# பருத்தித்துறையில் கண் பரிசோதனை

வடமராட்சி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நாளை சனிக்கிழமை கண் பரிசோதனை முகாம் ஒன்று இடம்பெற உள்ளதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்தி அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

'கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம், நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது. இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ். போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாகச் செய்யப்படும். எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு கோரப்படுகின்றார்கள்' என்றுள்ளது. (ம-100)

# ஹரிகரன் இசை நிகழ்வு: பணத்தை மீளளிக்க முடிவு

தென்னிந்தியப் பாடகர் ஹரிகரனின் இசை நிகழ்வில் சிறுதடங்கல் மற்றும் அசௌகரியம் காரணமாக நுழைவுச் சீட்டு மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தை மீளளிப்பதற்கு முடிவுசெய்துள்ளதாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவரான புலம்பெயர் தொழிலதிபரும் நொதேர்ன் யுனி நிறுவனத் தலைவருமான பத்மநாதன் இந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற இசைநிகழ்வில் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்பில், விளக்கமளிக்கும் விதமாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில விஷமிகளால் இந்த நிகழ்ச்சியின் போது பொதுமக்களுக்கு சில அசௌகரியங்கள் ஏற்பட்டதற்கு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

இதில் கிடைக்கப்பெற்ற பணத்தை, நிகழ்வில் ஏற்பட்ட சிறுதடங்கல் மற்றும் அசௌகரியம் காரணமாக மீளளிப்பதற்கு முடிவு செய்துள்ளேன். தங்களால் செலுத்தப்பட்ட பணம் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்குப் பயன்படுத்த எண்ணுவோர் அவ்வாறே விட்டுவிடலாம். பணத்தை மீளப்பெற விரும்புபவர்கள் 0777315262 இந்த இலக்கத்துடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-66)

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

01. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணைகளில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.

02. இக்கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.

03. இக்கேள்வியானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2024.02.15ஆம் திகதி தொடக்கம் 2024.02.28 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 2024.02.29 திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 5381, 021 225 6649) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கேள்வி எண் | தேவைப்படும் அளவு | | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41(16)/2/P/SP/2023-04 பொருளாதார ரீதியில் வசதி குறைந்த மாற்றுத் திறனாளிகளுக்கான சத்துணவு வழங்கல் திட்டம் | தீட்டற்பச்சை அரிசி | 1,935 Kg | கொள்வனவுக் கட்டளை வழங்கிய நாளிலிருந்து 15 நாட்கள் (கோரப்படும் அளவுகளில் பொதி செய்து வழங்கப்பட வேண்டும்). |
| 02 | | பயறு | 332.5 Kg | |
| 03 | | கடலை | 645 Kg | |
| 04 | | உளுந்து | 483.75 Kg | |

07. கேள்வி தொடர்பான இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கே உரியது.

**தலைவர்**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**
2024.02.15

## வேலைக்கு ஆள் தேவை (பெண்)

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தனியார் தொழிற்சாலைக்கு நன்கு முன் அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை.

- வயதெல்லை 30 தொடக்கம் 40 வரைக்கும்
- வேலைநேரம் காலை 7.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
- மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

074 123 5110

(CS 27887) A-1

## மணிவிழா வாழ்த்துக்கள்




பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியர்
திருமதி தனலட்சுமி குணசேகரம்
( யா / அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம், மீசாலை )

- சேவைக்காலம் : 22.03.1990 - 16.02.2024
- எமது பாடசாலையில் : 02.02.2015 - 16.02.2024

ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவோர்:
நலன்புரி சங்கம்
யா / அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம், மீசாலை.

(CS 27878)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனாய்வுப் பிரிவுக்கு காணிவழங்க எதிர்ப்பு

## வவுனியா ஒருங்கிணைப்புக்குழுவில் நேற்றுக் கருத்துமோதல்

வவுனியா, பெப். 16

வவுனியா பூங்காவீதியில் அமைந்துள்ள காணியில், தேசிய புலனாய்வுப் பிரிவினருக்கு இடம் வழங்குவதற்கு ஆளுநர் பரிந்துரைத்த நிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் நேற்று அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கு.திலீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது காணியற்ற அரச திணைக்களங்களான அரச ஒசுசல, புவிச்சரிதவியல் திணைக்களம், தெங்கு அபிவிருத்திசபை, பனை அபிவிருத்திசபை, சமூக நீர்வழங்கல் திணைக்களம், தேசிய புலனாய்வு அலுவலகம், மற்றும் பொது அமைப்புக்களான ஓட்டோ உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், பேருந்து உரிமையாளர் சங்கம், பாரவூத்திச் சங்கம், ஓய்வூதியர் சங்கம் ஆகியன தமக்கு நகரப்பகுதியில் காணி ஒதுக்கித்தருமாறு வவுனியா பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

அதற்கமைய குறித்த அமைப்புக்களுக்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பகுதி மற்றும் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பிடம் ஆகியவற்றை பிரித்து வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிடம் நேற்று அனுமதி கோரப்பட்டிருந்தது.

இதன்போது பூங்காவீதியில் அமைந்துள்ள காணி தேசிய புலனாய்வு அலுவலகத்துக்கு வழங்குவதற்காக ஆளுநரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து காணியை வழங்குவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் தீலிபன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

புலனாய்வுப் பிரிவு அனைத்து இடங்களிலும் இயங்கமுடியும், அது ரகசியமாக இருக்கவேண்டிய அமைப்பு. எனவே நகரப்பகுதியில் அதற்கு காணி வழங்குவது பொருத்தமானதாக இருக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இதன்போது தெரிவித்தார்.

(அ-ம-110)

31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் வீரகத்தி கோபாலகிருஸ்ணன்

பிறப்பு 21.03.1950



இறப்பு 17.01.2024

கடந்த 17.01.2024 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வீரகத்தி கோபாலகிருஸ்ணன் (கோபால்) அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.02.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பரணி
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 53996) V-1

## மருத்துவமனைகளுக்கு சோலர் பொருத்த நிதி

கொழும்பு, பெப். 16

மூன்று மருத்துவமனைகளுக்கு சூரிய மின்கலம் பொருத்துவதற்கென 2.8 பில்லியன் ரூபா ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ளது. சிறி ஜயவர்த்தன புர மருத்துவமனை, குருநாகல் மருத்துவமனை, இரத்தினபுரி மருத்துவமனை ஆகியனவற்றுக்கே சூரியமின்கலம் பொருத்தப்படவுள்ளது. (ஒ-6)

## குடு சலிந்து சகா கைது!

பாதாள உலகத் தலைவர்களில் ஒருவரான 'குடு சலிந்து' எனப்படும் சலிந்து மல்ஷிகவின் பிரதான சகா ஒருவர் டுபாயிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அழைத்து வரப்பட்ட குறித்த நபர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையக் குற்றப் புலனாய் வுத் திணைக்கள வளாகத்தின் ஆரம்ப விசாரணைகளின் பின்னர் கொழும்பு குற்றப்புல னாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

நினைவஞ்சலிகள்

1ஆம் ஆண்டு



25ஆம் ஆண்டு



கடந்த 26.02.2023 அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி
திருமதி நவமணி வாதவூரர்
(அளவெட்டி - ஓய்வு பெற்ற ஆசிரியர்)
தோற்றம் 10.08.1928
மறைவு 26.02.2023

திரு. நமசிவாயம் வாதவூரர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
தோற்றம் 10.11.1924
மறைவு 27.12.1999

அவர்களின் ஓராண்டு நினைவு இன்று (16.02.2024) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வா.கலாதரன்
வா.தயாபரன்
இல. 1314, K.K.S வீதி,
3 ஆம் கட்டை, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(cs.5394) (N.1)

குடும்பத்தினர்
077 691 5296
077 015 8124
071 856 1625

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 06 . 1952



மறைவு 12 . 02 . 2019

அமரர் தம்பித்துரை பாலகிருஷ்ணன்
(இளைப்பாறிய ஆசிரியர்- வணிகக்கல்வி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சமாதான நீதவான்)

திதி:- ரத சப்தமி (16.02.2024)

மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஐந்தாண்டுகள் சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு

குடும்பத்தினர்

CS (27914) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு மஹிந்தவும் ஆதரவாம்!

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு ஆதரவு வழங்கப்படும் - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்தராஜபக்ச தெரிவித்தார்.

'நான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகித்தவன். அதனை இல்லாது செய்தால் நல்லது'என்றும் மஹிந்த கூறினார். ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கான நகர்வா இது என எழுப்பப்பட்ட கேள்விக்கு, ' அப்படியும் இருக்கலாம், ரணிலை பற்றித் தெரியும் தானே...'என மஹிந்த பதிலளித்தார். (ம-44)


## கூறு விலை கோருதல்

தம்பிராய் பூநகரி விடத்தல் விநாயகர் ஆலயம் புனர் நிர்மாண வேலைகள் செய்ய வேண்டி உள்ளதால் கீழ்க்காணும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

இவ்வேலைத்திட்டத்திற்கான மூலப்பொருட்கள் ஆலய நிர்வாகத்தினால் வழங்கப்படும். எனவே கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் 24.02.2024 சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு முன்பதாக ஆலயத்தினைப் பார்வையிட்டு தங்களது கூறுவிலைகளை எழுத்து மூலம் மூடிய தபால் உறையில் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வேலைகள் விபரம்

1. மூலஸ்தானம் திருத்த வேலைகள்
2. அர்த்த மண்டபம் உட்பட ஏனைய மண்டபங்கள் ஓடுகள் கழற்றி கூரைமரங்கள் சரிபார்க்கப்பட்டு சொலிக்கன் அடித்தல்.
3. சுற்றிவர மதில்கள், மணிக்கூட்டுக்கோபுரம், மடப்பள்ளி உட்பட ஆலயம் முழுவதும் தரமான முறையில் பெயின்ற் அடித்தல்.
4. குறிப்பிட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 45 நாட்களுக்குள் முடிவுறுத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு

து. இரத்தினசிங்கம்
தலைவர்
077 246 3027

சி. கிருபாகரன்
செயலாளர்
077 465 9877

CS (25693) V-1



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம்
26
09
1951



மறைவு
13
02
2024

### சபாரத்தினம் நடராசா
(உரிமையாளர் ராஜன் ஆபரண மாளிகை, சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் நடராசா (13.02.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம்-நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்தையா-லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கராசா, கோகிலராணி, அற்புதராணி, சண்முகராசா மற்றும் நவரத்தினம் கணேசமூர்த்தி, தயாபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ருக்மணிதேவி, இந்திராணி சந்திரஜெயந்தி, ரஞ்சினி, ஜஸ்மின், காலஞ்சென்ற நவரட்ணம், கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் சுகந்தன் (Australia), சுபாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-சமூர்த்தி இலுப்பைக்கடவை), சுகன்ஜா (France), ஜானகி (France), றமணன் (CresMPA-மாங்குளம்), ஆகியோரின் அன்புத்தந்தையும் , தர்சினி, லிங்கேஸ்வரன், ஜங்கரன், சுரேஸ், தாட்சாயினி (ஆசிரியர் கிளி/விவேகானந்த வித்தியாலயம்), ஆகியோரின் அன்பு மாமனாரும் கேனிகா, ருசிகா, மதுனிகா, கஜீபன், ரோகித், அஸ்வின், நிரூஸ், அஷானி, அஜீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (16.02.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 700 7474 - மகன்
077 502 7474 - மகள்

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27718) V-1



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



திருமதி
### ஈஸ்வரபாதம் வசந்தரூபா

தோற்றம்
26.10.1929

மறைவு
18.01.2024

கடந்த 18.01.2024 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (15.02.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (17.02.2024) சனிக்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி ஊடாகவும், சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், வீட்டிற்கு வருகை தந்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற பொழுதெல்லாம் வைத்திய சிகிச்சைகளையும் பராமரிப்பினையும் வழங்கிய யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர், மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஈ.சரவணபவன் (மகன்)
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் (2010-2020)
உதயன் குழுமத் தலைவர்
T.P:071 411 5002, 071 411 5000

105, இராஜ வீதி, கோப்பாய்,
யாழ்ப்பாணம்.

ஈஸ்வரபாதம்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்புடன் கைது

யாழ்ப்பாணம், பெப். 16

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தின் காரைநகர் களபூமி பிரிவினர் கசிப்புடன் சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காரைநகர் பாலவோடையில் சுற்றுக்காவல் நடவடிக்கைகளின் போது 750 மில்லி லீற்றர் கசிப்புடன் சந்தேகநபரை கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-125)

# 'அஸ்வெசும' திட்டம்: விண்ணப்பம் கோரல்

கொழும்பு, பெப். 16

'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டத்துக்காக விண்ணபங்கள் ஏற்றுக்கொள்ளும் பணி நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்ததாவது:-

'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டத்துக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. 'அஸ்வெசும' முதற்கட்டத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத, வீட்டுத் தகவல் கணக்கெடுப்புக்கு உட்படாத எந்தவொரு குடும்பங்களும் இரண்டாம்கட்ட மீளாய்வுக்காக விண்ணப்பங்களை மார்ச் 15 க்கு முன்னர் சமர்ப்பிக்கமுடியும்.

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்தின் கீழ் 24 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மைகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முடிந்தவரை உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் நன்மைகளை வழங்கும் செயல்முறையை துரிதப்படுத்தமுடியும். விண்ணப்பிக்கையில் கட்டாயம் அடையாள அட்டை எண்ணைக் குறிப்பிடவேண்டும். தேசிய அடையாள அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரர்களுக்கு உடனடியாக அடையாள அட்டைகளை வழங்கும் விசேட வேலைத்திட்டம், ஆட்பதிவுத் திணைக்களத்தினால் பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

'அஸ்வெசுமவின்' இரண்டாம் கட்டத்திற்கான விண்ணபத்தை ஒன்லைன் முறையிலும் கிராம உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். www.wbb.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யமுடியும்.

இணையத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியாதவர்களுக்கான மாதிரி விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்கள் அல்லது சிவில் அமைப்புகளின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விண்ணப்பப்படிவங்களை எக்காரணம் கொண்டும் பணம் செலுத்தி வாங்க வேண்டியஅவசியம் கிடையாது - என்றார். (அ-ம-44)

# மார்ச் மாதத்துக்குள் மின்கட்டணக் குறைப்பு

கொழும்பு, பெப். 16

இலங்கை மின்சாரசபை சமர்ப்பித்துள்ள ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் மின்சாரக் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ இது தொடர்பில் தெரிவித்ததாவது:

2023ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற இலாபம் மற்றும் நீர் மின் உற்பத்தியைக் கருத்திற்கொண்டு கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மின்சாரக் கட்டணத்தை 3.34 வீதத்தால் குறைப்பதற்கு இலங்கை மின்சாரசபை பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. பொதுமக்களின் கருத்துகள் கேட்டறியப்பட்டதன் பின்னர் ஆணைக்குழு ஒன்றுகூடி கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

# மர நடுகைக்கு வாய்ப்பு ஏற்படுத்துக

முல்லைத்தீவு, பெப்.16

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பெருமளவு மரங்களை மீள்நடுகை செய்ய வழிவகைகளை ஏற்படுத்துமாறு அந்தப் பகுதி பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற பெரும் போரில் இங்கு பல கிராமங்களின் பெருமளவு மரங்கள் அழிவடைந்துள்ளன. கடந்த 14 ஆண்டுகளில் மரக் கன்றுகள் பெருமளவில் மீள் நடுகை செய்யப்படவில்லை. மர நடுகையைக் கூடு தலாக முன்னெடுப்பதன் மூலம் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (ப-13)


## வீடு வாடகைக்கு

உடுவில் கிழக்கு சுன்னாகம் மானிப்பாய் வீதி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு (அலுவலகங்களுக்கு விரும்பத்தக்கது).

தொடர்பு: 076 984 3572

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வயதான தம்பதியினரை வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு பெண் பணியாளர் (வயது 40-50 வரை) தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
இடம்: இளவாலை

077 086 8917

## வேலைவாய்ப்பு

ஆல் சிலோன் டிஷ்ரிபியூட்டர்ஸ்.சமுத்திரா ரேடர்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(யாழ் நகரில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: 077 494 9683, 077 077 6469


# மரண அறிவித்தல்

## கபிரியேல் சிந்தாத்துரை தாஸ்



இளவாலை பெரியவிளானை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் சிந்தாத்துரை தாஸ் அவர்கள் நேற்று (15.02.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கபிரியேல்-சூசனா தம்பதிகளின் அன்பு மகனும், யேசுதாசன் நேசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், யெயமணி (வதனா) அவர்களின் அன்புக் கணவரும், அருட்பணி அஜந்தன் (நாரந்தனை பங்குத்தந்தை, தீவகம்), அஜந்தா, அனிஸ்ரன், அனுராஜ் (கட்டார்), அச்சுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமார் (சுமன் ), விதுசா, விஜிதா ஆகியோரின் மாமனாரும், கியாராவின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை,பெனிடிற் மற்றும் அன்னமேரி, பற்றிமா, அமலன், மல்லிகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற றமேஸ்குமார் மற்றும் ஆனந்தகுமார், செபகுமார், அன்ரனிக்குமார், ஜெயக்குமார், மைக்கல்ராஜ், ஜெயா, றேன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (16.02.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அருட்பணி சி. அஜந்தன் (மகன்)**
**மருமகன் (சுமன்)**
**இளவாலை, பெரியவிளான்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 02 . 1950

மறைவு 15 . 02 . 2024



## சதாசிவம் ஸ்ரீஸ்கந்தராசா (சின்னராசா)

மண்டைதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வியாபாரி மூலை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் ஸ்ரீஸ்கந்தராசா (சின்னராசா) அவர்கள் நேற்று (15.02.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவரான புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோதிஆனந்தம் - மகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தில்லைநாயகி (ஜேர்மன்), காலஞ்சென்றவர்களான தவபலநாதன், சற்குணலிங்கம் மற்றும் பரமேஸ்வரி (ராசாத்தி - கனடா), தவானந்தராசா (தருமு), காலஞ்சென்றவர்களான வசந்தகுமாரி, செந்தில் மணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சாளினி (கீதா), சுரேஸ்குமார் (சுரேன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரனின் சிறிய தந்தையும், ரவீந்திரன், கோகிலா, தயா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜன்சிகா, ரிசான், கருணேஸ், அக்ஷயன், அகரன், சிந்துஜன், அனோஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கமலேஸ்வரி, புஸ்பவதி (தங்காள்), புஸ்பராணி (நந்தினி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை மறுதினம் (18.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 018 3676**
**+44 740 148 4778**
**வியாபாரி மூலை,**
**பிள்ளையார் கோவில் சந்தி,**
**பருத்தித்துறை.**

தகவல்:
**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசின்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறவிருந்த நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் உறுப்பினர் சந்திரசேகரம் பரா என்பவர் தாக்கல்செய்த மனு திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வாதி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம், சட்டத்தரணி புரந்தரன், சட்டத்தரணி ஐஸ்வர்யா ஆகியோர் முன்னிலையாகினர். வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிமன்று, தமிழரசுக் கட்சி தேசிய மாநாட்டை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது. இந்தத் தடை உத்தரவு இரண்டு வாரங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

இதேவேளை - இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்குத் தடை விதிக்கக் கோரி யாழ்.நீதிவான் நீதிமன்றத்திலும் நேற்றையதினம் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான பீற்றர் இளஞ்செழியனால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்றுப் பிற்பகல் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரர் சார்பில் சட்டத்தரணி குருபரன் ஆஜராகினார். சமர்ப்பணங்களையடுத்து எதிர்வரும் 19ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் மாநாட்டை நடத்த யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றமும் இடைக்காலத் தடைஉத்தரவு பிறப்பித்தது. வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் சண்முகம் குகதாசன், குலநாயகம், யோகேஸ்வரன் ஆகிய ஆறு பேருக்கு எதிராகவே குறித்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கைத் தாக்கல் செய்தவர்களான சந்திரசேகரம் பரா,பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் தீவிர ஆதரவாளர்கள். அத்துடன் இந்தவழக்குகளில் வாதி தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம், சட்டத்தரணி புரந்தரன் ஆகியோரும் சுமந்திரனின் சட்டத்தரணிகள் குழாமைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம-66-26)

## 13ஆம்...

முன்வைக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 22ஆவது திருத்தச்சட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த சட்டவரைவு பெப்ரவரி 13ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் பெப்ரவரி 20ஆம் திகதி ஆரம்பமாகும் நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது இந்தச் சட்டவரைவு சபையில் முன்வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கம்மன்பில தெரிவித்ததாவது:-

"அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் பொலிஸ் அதிகாரம் பயங்கரமானது. எனவே, மாகாணசபை முறைமையில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை நீக்குவது தேசியவாதிகளின் 37 வருடகால கனவாக இருந்து வருகின்றது. அந்தக் கனவை நனவாக்கும் வகையில் மாகாணசபைமுறைமையில் இருந்துபொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கான அரசமைப்பின் 22ஆவது திருத்தச்சட்ட வரைவை நான் முன்வைத்துள்ளேன்.

இந்தச் சட்டவரைவு பெப்ரவரி 13ஆம் திகதி வர்த்தமானியில் வெளியாகி உள்ளது. அதில் இருந்து 7 நாள்களின் பின்னர் நாடாளுமன்றத்தில் முன்வைக்க முடியும். இதன்படி 20ஆம் திகதி ஆரம்பமாகும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் சட்டவரைவை முன்வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் நாளில் இருந்து 14 நாள்களுக்குள், சட்டவரைவு தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் உயர்நீதிமன்றத்தில் அதனைச் சவாலுக்குட்படுத்தமுடியும். தமிழ்ப் பிரிவினைவாதிகள் இதற்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்லக்கூடும். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைக்கப்பெற்ற பின்னர், அதன்பிரகாரம் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றமுடியும்.

மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும். போர்க்காலத்தில் புலிகளுக்கு சில நாடுகள் நிதி அனுசரணை வழங்கின. ஆயுதங்களை வழங்கின. பயிற்சியளித்தன. ஆனால் இவை அனைத்தும் திருட்டுத்தனமாகவே இடம்பெற்றன. ஆனால் எமக்கு வெளிப்படையாக ஆதரவு கிடைத்தது. ஏனெனில் எமது பக்கம் இருந்தது உத்தியோகபூர்வப் படை. புலிகள் என்பது பயங்கரவாத அமைப்பாகும்.

எதிர்காலத்தில் பிரிவினைவாத போர் ஏற்படும்பட்சத்தில் அது வடக்கு மாகாணத்தின் பொலிஸாருக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான போராகவே இருக்கும். இரண்டுமே உத்தியோகபூர்வ படைகள். ஆக இலங்கைக்கு எதிரான நாடுகள், எவ்விதத் தடையும் இன்றி வெளிப்படையாக வடக்குப் பொலிஸ் படைக்கு உதவி வழங்கலாம். இதனால் பொலிஸ் அதிகாரம் ஊடாகப் பிரிவினைவாதிகள் பலமடையக்கூடும்.

13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் முதல்வருக்குப்பொறுப்புக்கூறவேண்டும். மாகாண பொலிஸ் ஆணைக்குழுவில் உள்ள மூவரில் இருவர் முதல்வரின் நியமனத்தால் வருகின்றனர். எனவே, பொலிஸ்அரசியல்மயமாக்கப்படக்கூடும். இந்தச்சட்டவரைவைநிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியம். தமிழ்ப் பிரிவினைவாதிகள் மட்டுமே பொலிஸ் அதிகாரம் கோருகின்றனர். எனவே, இந்தச் சட்டவரைவை நிறைவேற்றமுடியும்' - என்றார். (அ-ம-44)

## உயிர் குடிக்கும்...

யாழ்ப்பாணம், இணுவிலில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை ரயில் - வாகனம் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்ததையடுத்து, பாதுகாப்பான ரயில் கடவையை அமைக்குமாறு வலியுறுத்தி மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று மாலை 4.30 மணியளவில் ரயில் கடவையடியில் ஒன்றுகூடிய மக்கள் மாலை 6 மணி முதல் தொடர்ச்சியாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாலை 6.30 மணியளவில் குறித்த பகுதியால் ரயிலொன்று பயணித்தபோது ரயிலை இடைமறித்தும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. சுன்னாகம் பொலிஸாரின் தலையீட்டையடுத்து ரயில் பயணத்தைத் தொடர்ந்தது.

இதன்போது குறித்த ரயில் கடவையின் காப்பாளர் தனது கடமைகளைச் சரியாகச் செய்வதில்லை என இளைஞர்கள் குற்றம் சாட்டிய நிலையில், அவரைக் கைது செய்வதற்கான முயற்சிகளைத் தாம் மேற்கொண்டிருப்பதாகவும், எனினும், அவர் தலைமறைவாகியிருப்பதாகவும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மக்களிடம் தெரிவித்தார். பொலிஸாரின் நீண்டநேர சமரச நடவடிக்கைகளின் பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது. (அ-ம-66)

## ஜனாதிபதிப்...

வார்த்தையேபோதும். தேர்தலை வெற்றியைவிடவும் அது வலிமையானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பின்போது எனக்கு 86 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அதில் இரு வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் உள்ள சிரேஷ்ட தலைவரான இரா.சம்பந்தனின் இல்லத்தில் வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்னர் 19ஆம் திகதி இரவு கூடினோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் அவர் முக்கியமான விடயமொன்றைக் குறிப்பிட்டார். இதன்போது சஜித் பிரேமதாஸவும் இருந்தார்.

'டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளோம், அதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று டலஸ் இனவாதி அல்லர். இரண்டாவது ஊழல், மோசடி அற்ற அரசியல்வாதி' என்று சம்பந்தன் கூறினார். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்களத் தலைவர்களுக்கு வாக்களிப்பதற்குத் தீர்மானித்த முதல் சந்தர்ப்பம் அது. ஜனாதிபதி பதவியைவிட எனக்கு இது பெறுமதியானது" - என்றார். (அ-ம-44)

## எந்த...

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த நீதிமன்றங்களின் மூலம் தடையுத்தரவு பெறப்பட்டுள்ள சூழ்நிலையில் அது தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னையும் எமது கட்சியையும் குழப்பும் வகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்குகளைக் கண்டு நாம் அஞ்சப்போவதில்லை.

என்னை தமது தலைவராக ஏற்றுக்கொண்ட கட்சியினரையும், எமது கட்சியை தமது விடுதலைக்கான அடையாளமாக எண்ணியிருக்கும் மக்களையும் இத்தகைய சூழ்ச்சி வழக்குள் ஒருபோதும் முடக்கப்போவதில்லை. இன்னும் எத்தனை வழக்குகள் வந்தாலும் அத்தனையையும் எதிர்கொள்ள நாம் தயார். நீதி நிச்சயம் வெல்லும் - என்றார். (அ-ம)

## பரீட்சைக்கான...

இடம்பெற்றது. 10ஆம் தர மாணவர்களுக்கான தொகுதிப் பாடங்களில் ஒன்றான தமிழ் இலக்கியம் இரண்டாவது பகுதிப் பரீட்சை நேற்றுக்காலை இடம்பெறுவதாகவிருந்தது. இதன்போதே வடமாகாணக் கல்வித் திணைக்களம் பரீட்சை வினாத்தாளை பாடசாலைகளுக்கு அனுப்பாதமை தெரியவந்தது. இதையடுத்து பி.டி.எப். வடிவில் வினாத்தாள்கள் அனுப்பப்பட்டு அவை அவசர அவசரமாக பாடசாலைகளில் பிரதியெடுக்கப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. பாடசாலைகளில் பிரதியெடுக்கும் வசதி (பிறிண்டர்) இல்லாத பாடசாலைகள் மாற்று ஏற்பாடுகளுக்காக அந்தரித்துத் திரிந்தமையை அவதானிக்க முடிந்தது. இதனால் குறிப்பிடப்பட்ட நேரத்தை விட தாமதமாகவே பரீட்சைகள் ஆரம்பித்தன. அனைத்துப் பாடசாலைகளிலும் ஒரேநேரத்தில் பரீட்சைகள் ஆரம்பமாகின்றமை உறுதிப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் குயின்டஸைத் தொடர்பு கொண்டு கேட்டபோது; பரீட்சை வினாத்தாள்கள் அனுப்பப்பட்டன. நான்கு கேள்விகளே அதில் இடம்பெறவில்லை. அந்தக் கேள்விகள் பாடசாலைகளுக்கு பி.டி.எப். வடிவில் அனுப்பப்பட்டு பிரதியெடுத்துக் கொடுக்கப்பட்டன - என்றார்.

எனினும், வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அதிபர்கள் பரீட்சை வினாத்தாள்கள் தமக்குக் கிடைக்காதமையை உறுதிப்படுத்தினார்கள். (அ-ம)

**காணி விற்பனைக்கு**

**புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.**

1 பரப்பின் விலை 2 1/2லட்சம்.
180 பரப்பில் - 51 பரப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

***பார்வையிடும் நேரம்:***
காலை: 8.30 - மாலை 6.00

தொடர்புகளுக்கு:
**076 659 0583**
**074 260 0617**
**076 109 8504**

(CS 27866) N-1

**காணி விற்பனைக்கு**

இராசபாதை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:**
**077 986 5457**

(CS 27915) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
10 • 09 • 1942

இறப்பு
13 • 02 • 2024

## கனகசபை முதலி நடராசா

(ஓய்வுபெற்ற இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமையாளர்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை முதலி நடராசா அவர்கள் கடந்த (13.02.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை முதலி - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், கிருஷ்ணமேனன் (பொறியியலாளர் - அமெரிக்கா), இராதாகிருஷ்ணன் (பொறியியலாளர் - இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரிக்கா (பொறியியலாளர்), ஸ்ரீவனஜா (கணக்காளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தியாகராசா, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அபிநேயன், அனுபாலா, அபிநயா, மிதுன், அஸ்வின் ஆகியோரின் நேசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.02.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டையாலடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs.27913) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org